செ.வெ.எண்: 48/2021 நாள்: 25.03.2021

## திருப்பூர் மாவட்டம்.

## வாக்காளர் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் மாற்றுத்திறனாளிகள் வாகன விழிப்புணர்வு பேரணியினை மாவட்ட தேர்தல் அலுவலர் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் க.விஜயகார்த்திகேயன் இ.ஆ.ப., அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

திருப்பூர் மாவட்ட ஆட்சியரக பெருந்திட்ட வளாகத்தில் இன்று (25.03.2021) தமிழ்நாடு சட்டமன்ற பொதுதேர்தல் - 2021 தொடர்பாக மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் திருப்பூர் மாவட்டத்தில் 100 சதவீதம் வாக்களிக்க வலியுறுத்தி வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் வாகன விழிப்புணர்வு பேரணியினை திருப்பூர் மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.க.விஜயகார்த்திகேயன் இ.ஆ.ப., அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் -2021 வருகின்ற 06.04.2021 நடைபெறுவதை முன்னிட்டு 100 சதவீதம் வாக்களிப்பதன் அவசியத்ததை வலியுறுத்தி மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் பல்வேறு வகையான விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன்படி, இன்று (25.03.2021) மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் வாக்களிப்பதன் அவசியம் குறித்து வாக்களர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் விழிப்புணர்வு வாகன பேரணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார். இந்த வாகன பேரணி மாவட்ட ஆட்சியரக அலுவலகத்தில் துவங்கி நகரின் முக்கிய சாலைகளின் வழியாக பல்லடம் சாலை, தென்னம்பாளையம் மாநகராட்சி நடுநிலைப்பள்ளியினை வந்தடைந்தது. மேலும், இப்பேரணியில் வாக்களிப்பதன் அவசியம் குறித்த விளம்பர பதாதைகளை வாகனத்தில் ஏந்தியவாறு பேரணி நடைபெற்றது.

முன்னதாக, வாக்களிப்பதன் அவசியம் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் தேர்தல் விழிப்புணர்வு கையெழுத்து இயக்கத்தினையும் மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் க.விஜயகார்த்திகேயன் இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்து வாக்காளர் கையேட்டினையும் வழங்கினார்.

இந்நிகழ்வின் போது, மாவட்ட வருவாய் அலுவலர் திரு.கு.சரவணமூர்த்தி, மாவட்ட மாற்றுத்திறனாளி நல அலுவர் திரு.ஜெயபிரகாஷ், தேர்தல் வட்டாட்சியர் திரு.ச.முருகதாஸ் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம்.**